உ

திருவருணை யமக அந்தாதி.

(முதற் பாகம்)

இஃது
மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவரும்,
சேலம் காலேஜ் தமிழ் விரிவுரை யாளருமாகிய,
கவிராஜ பண்டிதர் ஆந்திரக் காசியப
திம்மப்ப அந்தணர் அவர்களால்
இயற்றப்பட்டது.

சேலம் வழக்கறிஞர்
திரு. R. V. இராமசாமி ஐயர், B.A., B.L. அவர்கள்
பொருளுதவியால்

தருமபுரி
சஞ்சீவி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

1935

Copy Right Reserved] [விலை அணா ஒன்று.

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	நூன்முகம் ...	i
2.	உரிமையுரை ...	iv
3.	Introduction ...	v
4.	மதிப்புரை ...	vii
5.	இயற்றமிழாசிரியர் துதி ...	x
6.	தமிழுலகிற்குப் பேருதவிபுரிந்த சிலதமிழ்ப்பெரும் புலவர்களின் உதவியுரைத்தல் ...	xi
7.	செய்ந்நன்றி கூறல் ...	xiv
8.	நூல் திருவருணை யமகவந்தாதி ...	1

நான்முகம்.

‘ துவக்கற அறிந்து பிறக்குமா ரூருந்
துயர்ந்திடா தடைந்துகாண் மன்றும்
உவப்புட னிலேத்து மரிக்குமோர் பதியு
மொக்குமோ நினேக்குநின் னகரைப்
பவக்கடல் கடந்து முத்தியங் கரையிற்
படர்பவர் திகைப்பற நோக்கித்
தவக்கல னடத்த வுயர்ந்தெழுஞ் சோண
சைலனே கைலைநா யகனே.’

என்பது, தவராஜ சிங்கமாகிய துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளது அருமைத் திருவாக்கு. பிறத்தலால் முத்தி யுறுதற்குரிய திருவாரூரும், தரிசித்தலால் வீடெய்துதற்குரிய தில்லையம்பதியும், சென்று மரித்தலாற் பரகதி பெறுதற்கேற்ற காசித்தலமும், ஒருகாலிருப்பிடத் திலிருந்த வாறே யுன்னுதலால் மோட்ச மடைதற்குரிய திருவருணையம் பதிக்குச் சற்றேனு மொப்பாகாவெனப் பெரியோர் கூறுவரேல், மற்று, அத்தலத்திற் கீடாக வேறெதனை உவமை கூற இயலும்?

இத்தகைப் பெருமை வாய்ந்த இத்தலத்திற்குப் பல பிரபந்தங்கள் அரிய பெரிய புலவர் பெருமக்களாற் செய்யப்பட்டுள்ளன. ‘யமக அந்தாதி’ இதுகாறும் இத்தலத்திற் கெவராலு மியற்றப் பட்டிலது. இதனை நினைந்து கூர்ந்து நோக்கி மேற்சொல்லிய யமக அந்தாதி யொன்றனை யியற்றல் வேண்டுமென்று பேராவல் கொண்ட எனக்கு, ஒரு நாள் தடங்கருணைப் பெருங்கடலாய திருவருணை யருமறையோன் கனவிடைக் காட்சி தந்தருளினன். அதனையே அடியேன் பற்றுக் கோடாகக்கொண்டு இந்நூலியற்றுவான் புகுந்து இதன் முதற் பாகத்துள்ள முப்பத்து மூன்று செய்யுட்களையும் பாடி முடித்தேன். இடையே நிகழ்ந்த அசௌகரியங்களால் எஞ்சிய செய்யுட்கள் இயற்றப் பெற்றில. கூடிய விரைவில் அவை இயற்றப் பெற்று வெளிவரும்.

யமகம் பாடுவதன் அருமை தமிழ்ப் புலவர்கள் அனுபவ சித்தமா யறிந்த தொன்றாகலான், அதனைத் தனியே ஈண்டெடுத் துரைத்தல் மிகை யாமென எண்ணி விடுக்கின்றேன். தமிழுலகம் இந்நூலை அன்புடன் ஏற்றுக் கொள்ளுமென்பது எனது கருத்து.

கவிஞர் பெருமான் ஸ்ரீமத் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களது மாணவ பாரம்பரையில் வந்தவரும், எனது இயற்றமிழாசிரியரும், மகா

வித்வானுமாகிய திரு. சுந்தர நடராஜ ஐயரவர்களது தோத்திரச் செய்யுட்களுடன்விளங்கு மிந்நூலைச் சிறந்த நாட்டுப்பற்று, மொழிப்பற்று மிக்கவரும், பரோபகார சீலருமாகிய சேலம் ஜில்லா கலெக்டர் திரு. S. V. இராமமூர்த்தி பந்துலுகாரு M. A., I. C. S. அவர்கட்கு அன்புடன் உரிமையாக்கி யுள்ளேன். உரிமைபெற அப்பெரியார் இசைந்த பெருந்தகைமைக்கு மிகவும் நன்றி பாராட்டுகின்றேன்.

தமிழுலகம் இலக்கிய இலக்கணங்களில் எத்துணையோ வளம் பெற்றோங்குதற்குக் காரணிகராயிருப்பவரும், மணிமேகலை, பெருங்கதை யாதிய பழைய உரைகளில்லாத சங்க நூல்களைத் தேடிப் பிடித்துத் தருவித் தருவிப் பன்முறையாய்ந்து எவரும் அசைக் கொணுவாறு அரிய பெரிய உரை விளக்கங் காட்டி, அச்சிட்டவரும், இது காறு மச்சேறாமல் ஏடுகளில் இருந்து வருகின்ற அருமை பெருமை கெழீஇய இலக்கிய இலக்கண நூல்களைச் சேமித்து வைத்து, அவற்றுக் கேற்ற குறிப்புரை வரைந்து பதிப்பித்து வருபவரும், இக்காரணங்களால் யாதொரு தடையுமின்றி யெவராலும் 'சங்க நூற் சக்கரவர்த்தி' என்று சிறப்பித்துப் போற்றப்படுதற் குரியவரும் ஆகிய மகா மகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி ஸ்ரீமத் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் அடியேனது வேண்டு கோட்கிணங்கித் தமதரிய அபிப்பிராயத்தை இந்நூல் விடயமாக எழுதி அனுப்பியருளினார்கள்.

எனது அன்புள்ள நண்பரும், வித்வ சிரோமணியும், உரையாசிரியச் சக்கரவர்த்தியும், உபய வேதாந்த நிபுணரும் ஆகிய திருவல்லிக்கேணி ஸ்ரீமத் வை. மு. கோபால கிருஷ்ணமாசாரிய சுவாமிகளவர்களும் தமதரிய கருத்தை யடியேன் பிரார்த்தனைக் கிணங்கிச் செய்யுள் மூலமாக எழுதி யனுக்கிரகித் தருளினார்கள். இம்மகான்களிருவர்க்கும் அடியேன் செயக்கடவ கைம்மாறு முண்டோ?

'தமிழ்ப் பெரும் புலவர் பாராட்டுச் செய்யுட்கள்' என ஓர் தலையங்கமிட்டு, அதன் கீழ் எனதாசிரிய பரம்பரையைச் சேர்ந்த கவிஞர் பெருமான் ஸ்ரீமத் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களையும், ஸ்ரீமத் Dr உ. வே. சாமிநாத ஐயரவர்கள், ஸ்ரீமத் வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியாரவர்கள், திரு. அ. வரத நஞ்சைய பிள்ளையவர்கள் முதலான பெரியோர்களையும் குறித்து, என்சிற்றறிவுக் கெட்டியபடி (அவர்களது) சீர்த்தியைக் குறிக்குஞ் செய்யுட்களை (யமகமாக) இயற்றி இந்நூலிற் சேர்த்துள்ளேன்.

ஜலகண்டபுரம் மகா வித்வானும், கவிஞர் திலகமும் எனதரிய நண்பருமாகிய ஸ்ரீமத் அ. வாத நஞ்சைய **பிள்ளையவர்கள்** எனது வேண்டுகோட்கிணங்கி நுண்மாணுழைபுல மிக்க தமது மதிவல்லபத்தாற் சிறந்த சாற்றுகவிகளை யியற்றி யன்புடனருளினார்கள். இவர்களது கெழுதகைமை பூண்ட பெருநட்பின் தன்மையை யுன்னி யுன்னி யுருகுவதன்றிச் செயற்குரிய பிறவுமுளவோ? உள்ளும் புறமுமொருங் கொத்த இவரது அன்பு மிகப்பாராட்டற் குரியது.

இலக்கிய இலக்கணங்களிற் கூர்த்த மதிவாய்ந்த வரும், சிலாசாசன விடயமான ஆராய்ச்சியிற் பெரும் புலமை வகித்திலகுபவரும், வழக்கறிஞரும், எனது நெடுநாளைய நண்பருமாகிய ஸ்ரீமத் E. R. **நரசிம்ம ஐயங்காரவர்கள்** B. A., B. L. எனது வேண்டுகோட்கிணங்கி, இந்நூற்கரியதோர் மதிப்புரையைச் சீரிய புலமைத் திறம் விளங்க ஆங்கிலத்திற் பொறித் தருளினமைக்குப் பெரிதுங் கடப்பாடுடையேன்.

மகா புத்திமானும், அரிய பெரிய உத்தியோகத்தில் சென்னையிலமர்ந் திருப்பவருமாகிய ஸ்ரீமத் **திவான் பகதூர்** R. V. **கிருஷ்ணையர்** B.A.M.L. அவர்களது தமையனார் தாசில்தாராக இருந்த ஸ்ரீமான் R. V. **வெங்கடரமண அய்யரவர்களது** புதல்வரும், ஏழைகட்குதவும் சகாயங்களில் உழைப்பவரும், வழக்கறிஞரும், தமிழ் வித்வானுமாகிய ஸ்ரீமத் R.V. **இராமசாமி ஐயரவர்கள்** B. A., B. L., இந்நூல் அச்சிடும் விடயமாக எனக்குச் சிறிதும் கவலை யுண்டாகாவாறு பொருளுதவி புரிந்தார்கள். இவ்வுதவி பொன்னே போற் போற்றத் தக்கதாகும். இந்நூலை யச்சிடப் பொருளுதவி புரிந்த இவரது நன்றியை மிக மதித்துச் செய்யுளின் மூலம் இந்நூலிற் பாராட்டிக் குறித்துள்ளேன்.

எனது தமிழாராய்ச்சி விடயத்தில் ஊக்க மளித்து வரும் சேலம் நகர பரிபாலன சங்கத் துறுப்பினர் திறத்தும், எனது கல்விக்கழகத்து மாணவர் மாட்டும், என்றும் மாறா அன்பு செலுத்தும் உள்ளமுடையேன்.

இதனை யழகு பெற அச்சிட்டுதவிய **தருமபுரி சஞ்சீவி அச்சுக்கூடத்** தலைவரவர்களது அன்பை மிகப் பாராட்டுகின்றேன்.

குற்ற நீக்கிக் குணங்கோடல் அறிஞர் கடன்.

சேலம்,
20—10—1935.

இங்ஙனம்,
கவிராஜ பண்டிதர்,
ஆந்திரக்காசியப திம்மப்ப அந்தணனார்.

சேலம் ஜில்லா கலெக்டரும், ஆந்திர அந்தண குல திலகரும்,
பரோபகார சீலரும், கல்விக் களஞ்சியமுமாகிய
திருவாளர் **S. V.** இராமமூர்த்தி பந்துலுகாரு **M.A., I.C.S.,**
அவர்கட்கு அன்புடன் இந்நூல் உரிமையாக்கப்பட்டது.

உரிமையுரை.

திருவளரு மருணகிரி யான்முட்கோர்
செழியமடக் கந்தாதிப்பேர்
மருவுதமிழ் நூலதனை யியற்றியவென்
ஆர்வமதன் மாண்பு காட்ட
உருவளர்நற் பெருந்தகையாய்! உனக்குரிமை
யுறவமைத்தேன் இராமமூர்த்தீ!
பெருமையுறு கலெக்டர்தொழி லார்ந்தவ! ஆந்
திரப்பனவ! பேருற்றோயே!

SRI.

INTRODUCTION.

1. According to Hindu mythology God Siva is said to have appeared in this world in different forms of the five elements—fire, air, earth, water and the heavens. The incarnation of God Siva in the form of fire is mentioned in Rig-Vedam and is narrated in detail in Kurma Puranam, Matsya Puranam and in Skandapuranam. Tiruvannamalai is identified as the place wherein God appeared in such a form. The Local Puranam, based upon the Sacred Scriptures, deals in extense as to the benefits that will accrue to the devotees who pay their homage to a God at Tiruvannamalai. This puranam has been rendered in Tamil verse by the celebrated poet, Elappa Navalar, who existed in the middle of the 16th century. Besides this, a mass of literature, both ancient and modern, has gathered round this topic in the shape of poems, lyrical, musical and devotional songs.

2. My intimacy, with Kaviraja Pandithar Mr. R. Thimmappa Iyer, has bred in me a high respect for his erudition and sound learning. As to his scholarship, he is up to date. Mr. Thimmappa Iyer, whose mother tongue is Telugu, is second to none in the cause of the advancement of the Tamil language and literature. **He is intensely pious** and **free from religious bigotry,** which I consider as the two supreme qualifications indispensable for a poet. As he has already published two poetical works, he is not a stranger to the goddess of Muse.

3. This young poet has taken up the theme in praise of God Siva at Tiruvannamalai. The form chosen by him is **Yamaga Anthathi**, a form of poetry, not hitherto sung by any other poet on the same theme. A poem is called an

anthathi when the last word of each stanza forms the first word of the succeeding stanza. Such a form of poetry is intended for easy recitation, especially, of devotional songs. Yamagum is a play upon words, which is difficult to be attempted except by savants in literature. Pillai Perumal Iyengar is the one poet, in whose compositions yamagum finds its perfection.

4. Now this young bard sings this lofty theme in sweet melodious strain; the style is simple, and the diction is elegant. My intin acy with the poet has not influenced me in this task of judging this little poem and I leave it to the readers to judge for themselves whether my estimate is not borne out by facts. I am, further, fortified by the opinions, of the Poet Laurette Dr. V. Swaminatha Iyer, than whom a greater son Tamil Nadu has not produced at the present day, and of Sriman Gopalakrishnamachariar, whose commentary on Kamba Ramayanam will stand to posterity as a monumental work. If I have erred in any way in my appreciation of this little poem I may be taken to have erred in good company.

5. In my humble opinion, this little poem is one best suited for being introduced as a text book in schools for youngsters.

SALEM,
10-10-1935.

E. R. Narasimha Aiyangar, B. A., B. L.,
Vakil.

உ

சிவமயம்.

மதிப்புரை.

Mahamahopadhyaya
Dakshinatya Kalanidhi,
Dr. V. Swaminathaiyer.

"Tyagaraja Vilas,"
Tiruvettiswaranpet,
Triplicane, Madras.
6—10—1935.

சேலம் முனிஸிபல் கல்லூரித் தமிழ் விரிவுரை யாளராகிய மகா-ா-ஸ்ரீ ரா. திம்மப்ப ஐயரவர்கள் இயற்றியுள்ள திருவருணை யமக வந்தாதியின் முதற் பாகத்தைப் படித்துப் பார்த்து மிக்க சந்தோஷமடைந்தேன். அதிலுள்ள செய்யுட்கள் பண்டிதரவர்களுடைய சிவபக்திச் செல்வத்தையும், பலநூற் பயிற்சியையும், பேருழைப்பையும் நன்கு தெரிவிக்கின்றன. அருணாசலேச்சுவருடைய பெருமைகளை அறிந்து கொள்வதற்கு இவ்வந்தாதி தக்க கருவியாகுமென்றும், பக்திமான்கள் இதனைப் படித்துப் பயனடை வார்களென்றும் எண்ணுகிறேன்.

இங்ஙனம்,

(Sd.) வே. சாமிநாதையர்.

ஸ்ரீ

V. M. Gopalakrishnamachariar,
Annotator of
Kamba Ramayanam.

17, Tholasingaperumal Coil Street,
Triplicane, Madras.
Dated 6-10-1935.

வெண்பா.

வாக்குத் தெளிய வளசிரம்ப நற்றமிழாற்
பாக்க ளினிதமையப் பாடினன்—காக்கும்
அருணைமடக் கந்தாதி யம்பனுவ லன்பன்
பருநூ லறிதிம்மப் பன்.

இங்ஙனம்,

(Sd.) வை. மு. கோபால கிருஷ்ணன்.

கவிஞர் திலகமாகிய ஜலகண்டபுரம் மகா வித்வான்

ஸ்ரீமத் அ. வரத நஞ்சைய பிள்ளையவர்கள்

இயற்றியருளிய சாற்றுகவிகள்.

[அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.]

1. திருவருணை வித்திடத்தொன் மலவலிபோய்ச்
சிவகதிப்பாற் சேரத் தக்க
திருவருணைந் துருகிவழி படவின்ப
நல்குகின்ற சிவமே தோன்றித்
திருவருணைத் துழாய்ப்பசுமை மார்பனயன்
றேடரிய சிகரி யாய
திருவருணைக் கரியமகத் துவயமக
வந்தாதி செப்பி னானல்

2. அன்னவன்முன் வேங்கடமே முதலாய
பலதளிகட் கான்ற சீர்த்தித்
தென்னவனாய் முன்னவனே வளர்த்ததமிழ்க்
கவிதைபல செப்பும் பாவிற்
பன்னவனற் பனவகுலத் தோன்றல்சே
ரலர்சேலப் பதிவாழ் வுற்றோன்
மன்னவன்மா நிலமதிக்கு மதிக்குமமை
திக்குமொரு வரம்பு போல்வான்

3. சங்கவிலக் கியந்தொல்காப் பியமுதல
விலக்கணமுஞ் சமய நூலுந்
தங்கவிலக் கியங்குவினைத் தடையாநீ
றைந்தெழுத்தாஞ் சாத னத்தாற்
சிங்கவிலக் கியபவத்தா ன னுபவத்தாற்
பிறர்க்குநெறி தெருட்டு மேலோன்
நங்கவிலக் கியமாக தமிழ்ப்புலமை
யோர்க்கெனவே நாட்டுந் தேட்டன்

4. சமையசங்கி லிப்பதியான் ரூழ்புலவா
சையிற்பதியான் றறுகட் கூற்றம்
நமையசங்கச் சம்மதியான் நம்மதியான்
வெண்மதியா னகுசெவ் வேணி
உமையசங்க ரற்கருது முளத்திடத்தா
னுளத்திடத்தா னுறக்கொண் டோங்குஞ்
சிமையசங்கக் குணக்குன்ரு னற்குணங்குன்
ருனெமக்கோர் சீர்த்த நண்பன்

5. நம்மப்ப னிவனெழுமை யினுமகலாச்
செம்பொருளை நல்கு மென்றுள்
விம்மப்பன் மாணவர்க்குஞ் செந்தமிழ்போ
திக்கவல்ல விறலோன் றிக்கிற்
சிம்மப்பல் புகழீட்டுஞ் செய்கையினான்
றமிழறிஞர் திருக்கண் போல்வான்
திம்மப்ப னேனுநாமஞ் சிறந்திடுநா
வலர்குலத்தின் றிலக மம்மா.

இயற்றமிழாசிரியர் துதி.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

1. மான்மணக்குந் திருக்கரமும் மதிமணக்குஞ்
செஞ்சடையும் மதித்தல் மேவு
கான்மணக்குந் திருநீறுங் கடல்மணக்கும்
உருளொளியுங் கவின்ப தங்கன்
போன்மணக்குஞ் செம்முகமோர் ஐந்தும்புயம்
ஒரெட்டும் போற்று வார்தம்
வான்மணக்கும் வினையிரிக்கும் நடமணக்கும்
நடராசர் வான்க ழல்கள்

2. அன்றியொரு பொருளையுமே பொருட்படுத்தாக்
குருமணியை யல்ல றேக்கிக்
கன்றிவரும் பவக்கடற்கோர் கதிரவனைக்
கலைபயிலப் போது வார்க்கென்
றென்றுமிக நன்றிதருந் தென்றமிழை
யின்னமுதை யுள்ளன் போடுஞ்
சென்றுபுகச் செவியூட்டும் நடராச
வெழின்மணியைச் சேவிப் பாமால்.

தமிழுலகிற்குப் பேருதவி புரிந்த சில தமிழ்ப்பெரும் புலவர்களின் உதவியுரைத்தல்.

எமதாசிரிய பரம்பரையைச் சேர்ந்த கவிஞர்பெருமான் திரிசிரபுரம் ஸ்ரீமத் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களைப் பற்றிய பாராட்டு.

[அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்]

(யமகம்)

மன்னுதிரு மாமணியார் வெற்பகத்தின்
மாண்புமிகு சோனாட் டின்கண்
மன்னுதிரு நகர்த்திரிசி ராமலையின்
வந்துகவி மழைபொ ழிந்தே
மன்னுதிரு மாவிருள்போக் கிருந்தமிழை
யூட்டுவிலன் றன்பு மாண
மன்னுதிரு மானிகர்த்த மீனாட்சி
சுந்தரனை யுன்னி வாழ்வாம்.

ஷெ கவிஞர் பெருமானிடத்துப் பன்னூல் பயின்றவரும், பல அரிய பெரிய நூல்களைத் திருத்தமாக உரைவிளக்கத்துடன் அச்சிட்டவரும், சங்க நூற் சக்கரவர்த்தியுமாகிய மகா மகோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர்

ஸ்ரீமத் உ. வே. சாமிநாத ஐயரவர்களது உதவி குறித்த பாராட்டுச் செய்யுள்.

[அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்]

(யமகம்.)

1. சங்கமது வுண்டுதெவிட் டாற்றுமளிக்
குலங்கள்கெழு தருக்க ளோங்குஞ்

சங்கமது ரைப்பதிக்கட் டமைத்திருந்த
தமிழ்நூல்கள் சாலச் செல்லாஞ்

சங்கமது சார்ந்தழிதல் கண்டிடாங்கிச்
சகமுய்யத் தந்த ளிக்குஞ்

சங்கமது கைக்கடவு ணிகர்சாமி
நாதன்றாள் தலையிற் கொள்வாம்.

வெண்பா.

2. பணிமே கலைநூற் பெருங்கதை பன்னு
மணியுலா வந்தாதி யாநூற்—பணிகுயிற்றித்
தக்கவுரை செய்சாமி நாதவனைச் சங்கநூற்
சக்ரவர்த்தி யென்னல் தகும்.

கம்பராமாயணம், வில்லி பாரதம், அட்டப் பிரபந்தம், திருக்குறள்,
நாலடியார், சூளாமணிப் பகுதிகள் அகநானூற்றுப் பகுதிகள்
முதலானவற்றுக்கு அரிய பெரிய விரிவுரை வகுத்த
உரையாசிரியச் சக்கரவர்த்திகளாகிய

ஸ்ரீமத் வை. மு. சடகோபராமானுஜாசாரியர்,
ஸ்ரீமத் சே. கிருஷ்ணமாசாரியர்
ஆகிய இருவரில்

முன்னவரது மாணவரும், எமதரிய நண்பரும், வடமொழி
தென்மொழிக் கடலை நிலை கண்டுணர்ந்த பெரியாரும,
உபய வேதாந்த நிபுணரும், உரையாசிரியச்
சக்கரவர்த்தியுமாகிய, திருவல்லிக்கேணி

ஸ்ரீமத் வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியாரவர்களது

உரையாற்றலைப் பற்றிய பாராட்டு.

[அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்]

(யமகம்)

படியாரும் படித்துவக்கும் படியினிக்கும்
பண்ணிறைநற் பண்பு பல்கும்
படியாரும் தமிழ்நூல்கட் கினியவுரை
பகுத்திசைப்பா ரில்லை யென்ற
படியாரும் நவிலாத படிபாடி
யம்போன்று பார்ம கிக்கப்
படியாரும் படியியற்றுங் கோபால
கிருட்டிணன்றன் பாதம் போற்றி.

கவிஞர் திலகமாகிய ஜலகண்டாபுரம் மகாவித்வான்

ஸ்ரீமத் அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள்

(எழுசீராசிரியச் சந்த விருத்தம்.)

வாத னஞ்சய மன்ப ருக்கருள்
வண்மை யன்பொரு வடிவமாம்
வரத னஞ்சய மஞ்ச னைத்தொழு
மன்பெ ருந்தமிழ் மாக்கவி
வரத னஞ்சய செந்த மிழ்த்துறை
வல்வ ளம்மிகு வள்ளனீ
வரத னஞ்சய ஞெத்திம் மண்மிசை
வாழி பன்னல மன்னியே.

செய்ந்நன்றி கூறல்.

திருவருணை யமக அந்தாதியை யச்சிடற்குப் பொருளுதவி
புரிந்த வழக்கறிஞரும், தமிழ்வித்வானுமாகிய
திரு R. V. இராமசாமி ஐயரவர்களைக்
குறித்துப் பாடிய வாழ்த்துக் கவி.

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

திருவமருந் தேவகிதன் செழும்புதல்வன்
கிருட்டிணப்பேர் திருந்தப் பன்னாற்
றிருவமருந் தோன்றலுடன் தோன்றியவேங்
கடரமணச் செம்ம லீன்ற
திருவமருங் கலைபிராம சாமியன்ப!
சீருணை மடக்கந் தாதி
திருவமரும் படியுதவித் தெள்ளிதினச்
சிடப்புரிந்தாய் சிறந்து வாழி.

தமிழ் நூல்களை யச்சிடும் விடயமாகப் பொருளுதவி புரிந்துவரும்
அன்பர் திரு. T. அண்ணமலைச் செட்டியா ரவர்களைப்
பற்றிய வாழ்த்துக் கவி

[கட்டளைக் கலித்துறை]

சேலப் பதியது சேர்குகை வாழுந் திருவனுகள்
சேலப் பதிலுறை செய்கெழு தேவாங்கன் சேர்நரையஞ்
சேலப் பதியா னெனுமரு ணையனற் சீர்ப்பெயரோன்
சேலப் பதிதொட் டணன்சுதன் வாழி திருச்சிறந்தே

உ

திருவருணை யமக அந்தாதி.

காப்பு

[நேரிசை வெண்பா]

சீர்திகழும் பெம்மானெஞ் செய்யவரு ணாசலன்மே
லேர்திகழ நல்லமடக் கேய்ந்ததிருப்—பேர்திகழ
மந்தாதி யொன்றினையான் பாடவரு ளார்ந்தளிக்குந்
தந்தா வளக்கடவுள் தான்.

நூல்

[கட்டளைக் கலித்துறை]

1. திருவரை பாரகத் தென்ன விழுச்சீர் செறிந்ததுநல்
திருவரை யார்புலித் தோலுடை யானுந் திகழ்தருகந்
திருவரை வேதன்மு குந்தன் றெரிவருந் தேவனுநீள்
திருவரை முத்தனு மாகு சிவனரு ணாசலமே.

2. சலமே புரிந்து திரிந்திடு தீய சழக்கரைநெஞ்
சலமே யிருட்செறி துட்டரைக் காணவே சாலநொந்தேன்
சலமே சடிலகஞ் சார்ந்தவ! சாம்பவ! சாருணா
சலமே யுகந்தவ! காத்திடு வாயருட் சங்கரனே.

3. கரங்களை யெட்டா வமைந்தவ வன்பருக் காய்திடத்திக்
கரங்களைந் தோங்கு மிடற்றிற் செறித்தவ கத்துபெருங்
கரங்களைப் போன்றிடு வீணரைக் கண்டித் தொதுக்குபயங்
கரங்களைப் பாற்று மருணை தழுவு கனற்கணனே.

4. கணத்தரு சூழு மருணை யிறைவ கழறிடுமெண்
கணத்தரு மாலுங் கருதற் கரியோய் கனற்பிழம்பாய்க்
கணத்தரு வாய்நிற்குங் கண்ணிய நின்றனை காண்பதரிதாய்க்
கணத்தரு வந்துபல் தோத்திரம் பாடுங் கருணையனே.

5. கருணைய னேயின்ப வாரிதி யேநிறை காரினமோங்
கருணைய வானந்த வன்பு நிறைந்து கனியுமவர்க்
கருணைய வொட்டாம லாதரிப் போய்நின் கழற்றுணையாற்
கருணைய வைத்திடு வாய்கங்கை யார்ந்தவென் கண்ணுதலே.

6. நுதல்விழி யாய்முப் புரத்தை யெரித்திட்ட நுண்ணுணர் [வெண்
ணுதல்விழிப் பார்நின் பெருமையை யோரார் நுவன்றிடு [மெண்
ணுதல்விழி தந்தவ னென்றிவர் நேடியே நொந்திடப்பண்
ணுதல்விழி யாய்சீ ரருணைய தாவடி நூபுரமே.

7. புரங்களைந் தட்டதை யுன்னியென் னெஞ்சம் புளகரும்பும்
புரங்களைந் தாயுடன் புக்கிருந் தாற்றிடும் போரினைக்கோ
புரங்களைந் தைந்தாய்ப் பொலியு மருணைப் புரியவுகிர்ப்
புரங்களைந் தானயன் போற்றிடும் புண்ணிய போக்குவையே.

8. குவைப்பாய் சிதைத்துக் கொடிய வரக்கரைக் கூர்ம்படையாற்
குவைப்பாய் சுருட்டிய கோர வசுரனைக் கொன்றொழித்துக்
குவைப்பாய்ப் பொருந்தவைத் தோன்றுதி கோவே குலவு
குவைப்பாய் எளியனை சீரரு ணையார் குலமுதலே. [கழற்

9. குலம்புரி தேவே யெனவென்பர் போற்றின் கொடியனவா
குலம்புரி தீமைகள் கூடுவிட் டோடுங் குலவிடுபார்க்
குலம்புரி தோளனும் வேதனுங் கும்பிடுங் கோவையளிக்
குலம்புரிந் தார்த்திடுந் தாரரு ணாசலற் கோடனன்றே.

10. கோடா மார்தருங் கோல வருணைக் குவடுடையாய்
கோடா மானுந் தழைவேம் பொடுவங் குறிஞ்சிமால்
கோடா மென்றிவை கொண்டநின் கோத்திரக் கூர்வளத் [தைக்
கோடா வென்மன மார்ந்து மகிழ்வினைக் கொண்டதுவே.

11. வேதங்கொள் கைத்தாளக் கௌணியாற் காத்திடு மேன்மை
வேதங்கொள் கைதவி ராதுபல் நோன்பு மிகமுடிக்க [யதே
வேதங்கொள் கைவிடுத் தாற்றுவர் மோனத்தை மேலவர்கா
வேதங்கொள் கைதைகள் சூழரு ணைப்பதி வேதியனே.

12. வேதின வெங்கெழு நீளோதி மஞ்ஞை மிகவுறைய
வேதின மன்னவற் றிற்குண வீக்கிடு வெந்தருவும்
வேதின வேடரு மாரரு ணைப்பதி மேவுசிவா !
வேதின மான வினையொழிப் பாய்துங்க மீனவனே.

13. மீனவ னேகங்கை மேய வருணைய மேனகரோய்
மீனவ னேகஞ் செறிவயற் கன்னல்வில் மென்கொடிசேர்
மீனவ னேகக் குளக்க ணெரித்தோய் மிளிர்விசும்பார்
மீனவ னேகங்கொண் மேன்மதி யோய்நீ விழைந்தருளே.

14. விழையார் தருநெறி வினிற் பழிப்பர் வெருவிதமா
விழையார் தருமமப் புல்லரை நீக்குநல் வித்தகா
விழையார் தருமுணர் வோரொன்பா னுக மிகுவகையா
விழையார் தருநா லருணைய ராருண் மேவிடுமே.

15. மேவிடு தீவினை வீந்தொழி யும்வீணர் வெற்றுரையு
மேவிடு தீவினை யாம்பில்லி சூனிய வெந்தொழிலா
மேவிடு தீவினைப் போலவம் மிண்டர்தம் மேல்நெகப்போ
மேவிடு தீவினை யாரரு ணாசலன் மேவலின்றே.

16. இன்றே வினைத்தொழு யேர்திரு வப்பா மேண்டகையார்
இன்றே வினைகய மீர்த்தனை கல்லொடு மேதுபயன்
இன்றே வினைவிளை வொன்று மெனத்தவ மேறநின்றார்
இன்றே வினைதெறு நல்லருணைய னிறைஞ்சுமினே.

17. மின்னலைப் போன்றழி காயத்தின் பெற்றி விளைவறிந்தா
மின்னலைப் போக்கிடி னீச னருணைய னீவனருண்
மின்னலைப் பானிற மென்கங்கை யான்றனை மேவிநினை
மின்னலைப் போன்றகத் தாரிரு ளோடிடும் மெய்ம்மையிதே.

18. தேவென்று சூழருணைக்கிரி சேர்ந்துறை செஞ்சடையோய்
தேவென்று வேறுமோர் தேவகங் கொண்டுநிற் றோர்தலிலா
தேவென்று பாசப் பிணிப்பைச் செகுத்திடத் தீருமோவந்
தேவென்று யர்தெற வேண்டுவ லென்னப்ப செவ்வணனே.

19. வணங்கரி யானயன் வாசவ னென்றிவர் வந்துமுடி
வணங்கரி யான்சூல வான்படை யானன் மதிநுதலவ்
வணங்கரி யானருணைப்பதி யானரன் வண்சிலைப்பொன்
வணங்கரி யானைநீ வாழ்த்துதி நெஞ்சே மயலிறுத்தே.

20. இறுத்தா னெயிற்றினை யெற்புரி வோன்றனை யேரெயின்
[மூன்(று)
இறுத்தான் முறுவலித் தட்டா னிழிபுத்த ரேயமொழிக்(கு)
இறுத்தான் றகுவிடை யிங்கித மாறனு யேர்மதுரை
இறுத்தான் புயத்திடை யாரருணையனை யேய்மனமே.

21. மனத்துற வுற்றொளிர் பீத மணிந்தே வரிவளையார்
மனத்துற வுற்றமர் வன்னிலை வாய்க்கினு மாமுனிவோர்
மனத்துற வுற்றிலங் கும்பெருஞ் சோதி மடுப்பரங்கா
மனத்துற வுற்றெரி வாலருணையன் மலையகத்தே.

22. மலையகத் தேமிளிர் மாதேவ வம்புய மாலையுருண்
மலையகத் தேயுற் றயிலா டுயின்றிலண் மாதிவடே
மலையகத் தேயுள மாற்றி யருள்வாய் வளைகடலா
மலையகத் தேவிதி வந்து வணங்கு மருணையனே.

23. அருமறை யாகமத் தேயுறை கோவை யருணையனை
அருமறை யப்பனை யிம்பரும் பொன்னுல கார்ந்திடுதே
அருமறை காலாந் தகனையன் பார வடிதொழினும்
அருமறை யும்பெரு வீட்டின்ப மெல்ல வமர்ந்திடுமே.

24. அமர்தரு மந்தா கினியணி வேணி யருணையனை
அமர்தரு மந்தாத் தாரு முனிவரு மாவலுடன்
அமர்தரு மந்தக னைச்செற்ற வாற்ற லறைந்துமிக
அமர்தரு மந்தனை யாற்றுவர் சால வகங்கனிந்தே.

25. கனியா வமைந்தென்று மின்ப மளித்திடுங் கற்பகமென்
கனியா வகத்தையுங் காந்தெரி நெய்யாய்க் கரைபெருவே
கனியா வகத்தையுந் தன்க ணடக்கிக் கழறவொணாக்
கனியா வமர்ந்தநற் சோதி யருணையன் காற்றுணையே.

26. கானீர் கனற்கக னம்புவி யென்று கழறுமைந்தாய்க்
கானீர்ம் பொழிற்றடம் கானற் கழிக்கரை காவிரிமென்
கானீர் முனைவாட் கணைவேன் முதல கருவியவாய்க்
கானீர் மையபெருங் கொண்ட லருணையன் காப்பெனக்கே.

27. காத்தலை மேற்கொள் கனவண்ணன் போதனற் கற்பக
[மென்
காத்தலை வாசவ னென்றிவர் காணாக் கனல்வணனங்
காத்தலை தாகநல் வேதங்க ளோதுங் கவின்மறையோர்க்
காத்தலை யாருட் செய்த வருணையற் காண்மனமே.

28. மனமே புறம்பே திறம்பியே சென்றனை மாழ்கினைபொன்
மனமே தினிகாவல் பூணநன் மாதர் வளங்கெழும
மனமே தியினீ மயலாய் வளைந்தனை வாழருணை
மனமே வியதந் தருள்பவற் கொண்டிடர் மாற்றிநில்லே.

29. மாற்றரு வன்சம யப்பெரு வள்ளல் வதியளற்றின்
மாற்றரு வன்னுரு வன்னரு வோடுரு வன்னெனுநீ
மாற்றரு வன்னயன் போற்று மருணைய வந்தெனையே
மாற்றரு வன்கட் டுயரினைப் போக்கிடாய் மாதவனே.

30. மாதவன் மண்பொதுத் தந்தையென் றின்னோர் வணங்கரிய
மாதவன் மானிட மேந்தியே றார்ந்தோன் வளவிமவான்
மாதவன் பிஞ்சகன் தானு வருணையன் மாவொளியா
மாதவன் றற்பரன் மால்கழ னற்றுணை மன்னெனக்கே.

31. மன்ன வலாரியை மானு மெழிற்செல்வ மாவிரத
மன்ன வலங்கொளும் வண்குரா லார்தரு வள்ளலென
மன்ன வலங்கெழு மானிடம் பாடிய வம்பொழித்தம்
மன்ன வருணையன் வார்கழற் போற்றுமின் வார்ந்துநின்றே.

32. வாரங்க மார்தரு மாமுடிச் சங்கரன் வாலரவம்
வாரங்க மார்தரு மாதேவ னற்றாள் வணங்கலராய்
வாரங்க மார்தரு மாதரை வீழ்குவர் மாந்த ரந்தோ
வாரங்க மார்தரு மாவரு ணையனை மன்னுநெஞ்சே.

33. சேயரி யோடயன் சென்றிறைஞ் சும்பெருஞ் சீர்மைமிக்கார்
சேயரி யோடயில் வேனய னத்தார்வீழ் தீங்கருருச்
சேயரி யோடயில் வண்டினஞ் சூழ்பொழிற் சீருணைச்
சேயரி யோடயி லார்படைத் தேவரைச் சேருமினே.

Copies can be had from :—

Pandit S. R. Thimmappa Iyer,
Lecturer in Tamil,
Municipal College,
SALEM.